
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1059

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

36

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# குதிரைகளை மீண்டும் ஓடவைத்த உச்ச நீதிமன்ற உத்தரவு!



ஓவியம் : ரவி பேலட்

இரண்டு நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்த குதிரைப் பந்தயம் 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு மூலமாக முடிவுக்கு வந்தது. அடுத்த சில மாதங்களில் சென்னையில், ராஜாஜியின் நினைவு மண்டபத்தைத் திறந்து வைக்க வருகைதந்த மூத்த தலைவர் ஜெயப் பிரகாஷ் நாராயண் அவர்கள், முதலமைச்சர் கலைஞருக்கு மிகப் பெரிய பாராட்டுப் பத்திரம் வாசித்தார்.

“குதிரைப் பந்தயம் ஒரு சூதாட்டம். அதை அண்மையில் இங்கு ஒழித்துவிட்டார்கள். இதனால், இங்குள்ள பெரும்புள்ளி களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கலாம். அதையும் கலைஞர் சமாளிப்பார்” எனக் கூறியதை, கலைஞர் நெஞ்சுக்கு நீதியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறியதுபோலவே, பந்தயத்தில் கொழுத்தவர்களும் பெரும்புள்ளி களும் உச்ச நீதிமன்றத்தை நாடி, தமிழ்நாடு அரசின் தடைக்கு எதிராக இடைக்கால உத்தரவைப் பெற்று குதிரைப் பந்தயத்தை மீண்டும் தொடங்கினர். ஆனால், ஏராளமான கட்டுப்பாடுகளால் பந்தயத்துக்கான விறுவிறுப்பு குறைந்தது.

குறிப்பிட்ட சில மாதங்களில் மட்டுமே பந்தயங்களை நடத்தலாம், குறிப்பிட்ட வரையறைகளுக்கு உட்பட்டுதான் நடத்த வேண்டும் என்பது போன்ற கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டதால், குதிரைப் பந்தயத்தை நாடிச்சென்று பணத்தை இழந்து, வாழ்வைத் தொலைப்போரின் எண்ணிக்கை குறைந்தது. மொத்தத்தில் கலைஞரின் நோக்கம் வென்றது.

அந்தத் துணிச்சலான செயலை நினைவு படுத்தும் விதமாகத்தான் சென்னை அண்ணா மேம்பாலம் அருகே இரண்டு சிலைகளை நிறுவினார் கலைஞர். அது, குதிக்கும் குதிரையைத் தடுத்து நிறுத்திய ஒரு மனிதனின் சிலை.

### நிலத்தைக் கையகப்படுத்தும் முயற்சி!

1986-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட *Tamil Nadu Acquisition of Land for Industrial Purposes Act, 1986* மூலம் மெட்ராஸ் ரேஸ் கிளப் வசம் இருந்த நிலத்தைக் கையகப்படுத்த அரசு உத்தரவிட்டது. குறிப்பாக, பந்தயங்களில் நடைபெற்ற முறைகேடுகள், தவறான நடைமுறைகள் மற்றும் பதிவுகள் இல்லாமல் நடைபெற்றுவந்த சூதாட்டங்களை ஒழிக்க, இந்த நடவடிக்கையை எடுப்பதாக அன்றைய அரசு கூறியது. அப்போதைய சட்டத்துறை அமைச்சர் சி.பொன்னையன், 1986 மே 7-ஆம் தேதி, சட்டமன்றத்தில் வெளியிட்ட ஓர் அறிவிப்பில், “குதிரைப் பந்தயங்களில் சூதாட்டம் அல்லது பந்தயம் வைப்பது இனி குற்றமாகக் (*cognizable offence*) கருதப்படும்” என்று தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில், ரேஸ் கிளப் நிலத்தைக் கையகப்படுத்த, பின்னாட்களில் தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக இருந்த, ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.சங்கர் நியமிக்கப்பட்டார். அவர் பொறுப்பேற்று, மெட்ராஸ் ரேஸ் கிளப் வைத்திருந்த அனைத்து சொத்துகளையும், கடன்களையும் கைப்பற்றியதாக அறிவித்தார். ஆனால், ‘ரேஸ் கிளப் உறுப்பினர்கள் ரேஸ் கோர்ஸ் வளாகத்துக்குள் நுழையவும், கிளப் வசதிகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுவர். ஆனால், பந்தயம் நடத்த அவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. நிர்வாகத்தில் உரிமை இல்லை’ என சில வாய்ப்புகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் இந்த உத்தரவுக்கு எதிராக மெட்ராஸ் ரேஸ் கிளப், அதே வேகத்தில் உச்ச நீதிமன்றம் சென்றது.

‘1974-ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசு கொண்டுவந்த குதிரைப் பந்தயத் தடைச் சட்டம் செல்லும்’ என்பதை ஆதரித்து, சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து, 1975-ல் தாக்கல் செய்த மேல்முறையீட்டை திரும்பப் பெற்றது. இதன்மூலம், தமிழகத்தில் குதிரைப் பந்தயங்கள் அதிகாரபூர்வமாக நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதாவது, முன்பு தாக்கல் செய்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, புதிய வழக்கைத் தாக்கல் செய்தது.

### மீண்டும் தொடங்கிய பந்தயங்கள்!

புதிய வழக்கை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம், 1988 ஜூனில், குதிரைப் பந்தயம் விவகாரம் குறித்து ஆய்வுசெய்ய ஒரு குழுவை அமைத்து, குழுவின் பெரும்பான்மை கருத்து அடிப்படையில் உத்தரவு வழங்கப்படும் எனக் கூறியது. அதன் தொடர்ச்சியாக, இரண்டு மாதங்களுக்குப் பிறகு, உதக மண்டலத்தில் மீண்டும் குதிரைப் பந்தயங்கள் தொடங்கின. அதன்பின்னர், உதகமண்டலம் குதிரைப் பந்தயத்தை சென்னையில் நடத்துவதாக, சென்னை ரேஸ் கிளப் இயங்கத் தொடங்கியது.

1996-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பில், ‘1986 சட்டம்’ அரசியலமைப்பின் 14-வது பிரிவுக்கு எதிரானது, பாகுபாடானது எனக் கூறி 1986-ஆம் ஆண்டு நிலத்தைக் கையகப்படுத்தும் அரசின் உத்தரவை ரத்துசெய்தது. முக்கியமாக, 1986 நிலம் கைப்பற்றும் சட்டம் ரத்து செய்யப்பட்டதற்கு உச்ச நீதிமன்றம் கூறிய முக்கிய காரணம், ‘அரசு கூறிய, பொதுநலன் என்பது நிரூபிக்கப்படவில்லை. ஆகவே, 1986 Act *unconstitutional*’ என்றது.

1986-இல் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டம் சமூக மாற்றத்தை மையமாகக் கொண்ட அரசியல் முடிவாக அல்லாமல், நிர்வாக ரீதியான கைப்பற்றலாகவே இருந்தது.

கிளப் உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டனர்; பந்தயங்களும் பின்னர் மீண்டும் தொடங்கின. அதாவது, பிரச்சினையின் வேராக இருந்த சூதாட்ட கலாச்சாரம் முழுமையாக அகற்றப்பட வில்லை. அதனால், தமிழ்நாட்டில் சூதாட்டம் சட்டபூர்வமாக அனுமதிக்கப்படும் ஒரே விளையாட்டு குதிரைப் பந்தயம்தான் என மீண்டும் பெயர் பெற்றது.

### சட்டம் அனைவருக்கும் சமம்

1996-ல் உச்ச நீதிமன்றம் 1986 சட்டத்தை ரத்துசெய்தது என்பது, ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் குறைபாடு குறித்துதான்; அரசு பொதுநலன் கருதி ‘நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை குறித்து அல்ல’ என்பதில் உறுதியாக நின்றார் கலைஞர்.

அரசியலமைப்பின் 14-வது பிரிவு சமத்துவத்தை உறுதிசெய்கிறது என்றால், அதே சமத்துவம் பொதுமக்களுக்கு எதிராகச் சிலருக்கு மட்டும் சிறப்பு உரிமை வழங்குவதை அனுமதிக்காது என்பதில் தெளிவாக இருந்தார் கலைஞர்.

மெட்ராஸ் ரேஸ் கிளப் விவகாரம், நிலம் குறித்த சட்டப் பிரச்சினை மட்டும் அல்ல; ‘இந்த மாநிலத்தின் வளங்கள் யாருக்காக?’ என்ற அடிப்படை கேள்வி எழுப்பும் அரசியலாகப் பார்த்தார். குறிப்பாக, பொதுநிலம் - பொதுமக்கள் பயன்படுத்தப் பயன்பட வேண்டும். அரசு - சமூக நீதி கொள்கையில் உறுதியாக நிற்க வேண்டும் என, கலைஞரின் அறிக்கைகள் பேசின. அதை நிறைவேற்றவும் ஒரு காலம் தேவைப்பட்டது.

இதற்கிடையே, பல போராட்டங்களுக்கு இடையிலும் குறிப்பிட்ட சில காலங்களைத் தவிர, சுமார் 200 ஆண்டுகளுக்கு மேல் குதிரைப் பந்தயம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. கடந்த 2024-ஆம் ஆண்டு, மெட்ராஸ் ரேஸ் கிளப் நிலத்தை முழுமையாக அரசு கைப்பற்றியது. இப்போது, நிலம் அரசு வசம். அதை நிகழ்த்தக் காரணமாக இருந்தவர் கலைஞர்.

> “சென்னை அண்ணா மேம்பாலம் அருகே இரண்டு சிலைகளை நிறுவினார் கலைஞர். அது, குதிக்கும் குதிரையைத் தடுத்து நிறுத்திய ஒரு மனிதனின் சிலை.”

...தொடரும்

## எஸ்.ஐ.ஆர். - அதிர்ச்சியூட்டும் தகவல்கள்!

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, 97 லட்சம் பேரை நீக்கி வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளது தேர்தல் ஆணையம். இதுதொடர்பாக, அதிர்ச்சியூட்டும் தகவல்களை ‘தி இந்து’ பத்திரிகையின் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. அதன் முக்கிய பகுதிகளை தனது சமூக வலைதளப் பக்கத்தில் தமிழில் பட்டியலிட்டுள்ளார் மூத்த பத்திரிகையாளர் விஜய்சங்கர்.

“14 வாக்குச் சாவடிகளில் இளவயதில் இறந்தவர்கள் என்கிற பெயரில், நீக்கப்பட்டுள்ள வாக்குகளின் விகிதம் அசாதாரணமானதாக இருக்கிறது. 35 வாக்குச்சாவடிகளில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு காட்டப்பட்டுள்ளது. 8,361 சாவடிகளில் நீக்கப்பட்ட பெயர்களின் விகிதம் அதிகமாக இருக்கிறது. 3,907 இடங்களில் இறந்தவர்களாகக் கருதப்பட்டவர்களின் விகிதம் மிகையாக இருக்கிறது. 6,139 பாகங்களில் வீட்டில் இல்லை (ABSENT) என்று நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. 172 பாகங்களில் ‘நிரந்தரமாக குடிமாறிப்போன பெண்கள்’ என்கிற வகைமை சந்தேகத்துக்குரியதாக இருக்கிறது.

50 பேருக்கும் மேல் இறந்துவிட்டதாகக் கூறப்படும் 14 வாக்குச்சாவடிகளில், 50 சதவீகிதம் பேர் 50 வயதுக்கும் குறைவானவர்கள். பொதுவாக, மக்கள் தொகை கணக்குப்படி, 50 வயதுக்கும் மேற்பட்டோர்தான் இறக்கிறார்கள். சான்றாக திருவிடைமருதூர் பஞ்சாயத் யூனியன் நடுநிலைப்பள்ளி வாக்குச் சாவடியில் இறந்தவர்களாகக் காட்டப்படும் 131 பேரில் 74 பேர் ஐம்பது வயதுக்கும் குறைவானவர்கள். 35 வாக்குச் சாவடிகளில் நீக்கப்பட்டவர்களில் 75 சதவிகிதம் அல்லது அதற்கும் மேல் பெண்கள். சான்றாக, திருச்செந்தூரிலிருக்கும் புனித சூசை ஆரம்பப்பள்ளியில் நீக்கப்பட்ட 110 பெயர்களில் 95 பேர் பெண்கள்.

103 சட்டமன்றத் தொகுதிகளில் இருக்கும் 495 வாக்குச் சாவடிகளில் ‘இறப்பின்’ காரணமாக அனைத்து வாக்காளர்களும் நீக்கப்பட்டிருக்கிறார்கள். சான்றுகள், திருமங்கலம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளியில் 142 பேர்; சிவகங்கை பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளியில் 134 பேர்; திருவிடைமருதூர் நடுநிலைப்பள்ளியில் 131 பேர்; பாபனாசம் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளியில் 131 பேர். இதுபோல் இன்னும் ஏராளமான விவரங்கள் உள்ளன” என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்

### தலைவருக்கு கும்பகோணத்தில் வரவேற்பு!



1995-ஆம் ஆண்டு ஜூன் 9-ஆம் தேதி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கும்பகோணம் வருகைதந்தபோது எடுக்கப்பட்ட படம். தலைவர் கலைஞர் அவர்களுடைய மைத்துனர் திருமாகாளம் தெட்சிணா மூர்த்தி அவர்களின் இல்லத் திருமண விழாவுக்கு வருகைதந்தபோது, கும்பகோணம் எல்லையில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் தலைவர் மரக்கன்று நட்டுள்ளார். தலைவருடன், கழக முன்னோடிகள் ஆற்காட்டார், கோ.சி.மணி அவர்களும் இப்போதைய மாவட்டச் செயலாளர் சாக்கோட்டை அன்பழகன், மலையப்ப நல்லூர் கனகராஜ், அப்போது ஒன்றிய மாணவரணி அமைப்பாளராக இருந்த என் கணவர் வழக்கறிஞர் மு.ராம்மோகன்ராஜ் அவர்களும் உடன் இருப்பதைப் பார்த்து மகிழ்ந்தேன். கடந்தகால நிகழ்வுகள் மீது ஆர்வத்தைத் தூண்டும் படம்.



இரா.கவிதா

**– இரா.கவிதா, அரசு வழக்கறிஞர், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர், கும்பகோணம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தேர்தல் சிறப்பு மாநாடு!

1967-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் நான்காவது பொதுத்தேர்தல் நடைபெறும் என்கிற அறிவிப்பு வெளியானது. அதற்கான வியூகங்களை, வகுக்கத் தயாரானது கழகம். அதையடுத்து, கழகத்தின் நான்காவது மாநில மாநாடு தேர்தல் சிறப்பு மாநாடாக 1966-ஆம் ஆண்டு, டிசம்பர் 29, 30, 31 மற்றும் ஜனவரி 1-ஆம் தேதி என நான்கு நாள்கள் நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131